# குடும்ப ஆரோக்கியத்திற்கு 100% உத்தரவாதம்

## 10.01.2014



பாலசுந்தரம் கூடைகளில் வளர்க்கப்படும் செடிகள்

ஆர்வமும் உழைப்பும் இருந்தால், அடுக்குமாடி வீடுகளில் கூட அழகாக விவசாயம செய்ய முடியும என‌ப்தை சமீபகாலமாக நகரவாசிகள் நிரூபித்து வருகிறார்கள். அவர்களில ஒருராக தனது அடுக்குமாடி வீட்டில் மாடித் தோட்டம் அமைத்து விவசாயம் செய்கிறார், திண்டுக்கல், சின்னசாமி. திணடுக்கல் மாவட்டத்தில் வேளாண்மை அலுவலாக வேலை செய்கிறேன். எனக்கு இயற்கை விவசாயத்தில் ஆர்வமும் நம்பிக்கையும் அதிகம். அதனால்தான், வீட்டிலேயே 1,500 சதுர அடியில் தோட்டம் போட்டு இயற்கை முறையில், தக்காளி, கத்தரி, மளிகாய், பொன்னாங்கன்னி, தண்டுக்கீரை, சிறுகீரை, ரோஜா, முள்ளங்கி என்று சாகுபடி செய்கிறேன். மாடியில் தோட்டம் அமைப்பது என்பது, இப்போது மிகவும் சுலபமான விஷயமாகிவிட்டது. இதற்காகவே கடைகளில் தனியாக விற்கும் பைகளை வாங்கி மண், மண்புழு உரத்தைக் கலந்து கொட்டி, செடிகளை வளர்க்க முடியும். தினமும் அரை மணி நேரம் ஒதுக்கி, இந்தச் செடிகளை கவனித்தால் போதும். காய்கறி வாங்குவதற்காக பையைத் தூக்கி கொண்டு அலையத் தேவையில்லை. செலவு, அலைச்சல் குறைவு என்பதை விட விஷமில்லாத காய்கறிகள் கிடைக்கும் என்பதுதான் முக்கியமான விஷயம். திண்டுக்கல் மாதிரி பகுதிகளில் கோடையில் வெயில் அதிகமாக இருக்கும். அதனால், பசுமைக்குடில் அமைத்து முள்ளங்கி, இஞ்சி விளைய வைக்கிறேன். மாடித் தோட்டத்திற்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்திருக்கிறேன். 15 நாளைக்கு ஒரு முறை ஒரு கைப்பிடி மண்புழு உரம் தூவுவேன். ஒரு சாகுபடி முடிந்ததும், அடுத்த முறை அந்தப் பையில் அதே பயிரைப் போடுவதில்லை. வேறு பயிரைத்தான் நடுவேன். அவ்வளவுதான் பராமரிப்பு. ஆனால், மாடித் தோட்டம் கொடுக்கும் பலன் அளவில்லாதது. எங்க தேவைக்குப் போக மீதி காய்களை நண்பர்களுக்குக் கொடுத்துவிடுவோம். எங்கள் காய்கறிகளை சாப்பிட்ட நண்பர்கள் சிலரும் அவங்க வீட்டில் தோட்டம் போட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்றார் சின்னசாமி. எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும், தோட்டத்திற்குள் வந்துவிட்டாலே மன அழுத்தம் சுத்தமாக குறைந்துவிடும். சொட்டுநீர் இருந்தாலும், என்னோட பொண்ணு தினமும் அவ கையாலேயே செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வளர்ப்பதில் மிகவும் சந்தோஷப்படுகிறாள். மொத்தத்தில் இந்த தோட்டம் எங்க குடும்பத்தினருடைய உடலுக்கு மட்டுமில்லாமல்.. மனதிற்கும் ஆரோக்கியத்தைக் கொடுத்துக்கிட்டிருக்கு என்று ஆத்மார்த்தமாகச் சொன்னார். தொடர்புக்கு சின்னசாமி, செல்போன் :97860 59130 அரசு அலுவலகங்களில் கூரைத் தோட்டம்! வேகமெடுக்கும் புதுமுயற்சி ! தமிழ்நாட்டின் அரசு அலுவலகங்களில் ‘கூரைத் தோட்டம்’ என்ற திட்டத்தை முதன்முறையாக கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அறிமுகப்படுத்தி அதன்மூலம், மொட்டை மாடியில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி காய்கறிகள், பழங்கள், கீரைகள், பூக்கள் வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்தி

வருகின்றனர். கேரட், பீன்ஸ், முள்ளங்கி, கத்திரி, மிளகாய், பட்டாணி, வெண்டை, புடல், பாகல், பீர்க்கன், சுரை, வெள்ளரி. அவரை, பீட்ரூட், வெங்காயம். கொத்தவரை, முருங்கை போன்ற காய்கள், வாழை, மா, சப்போட்டா, கொய்யா ஆகிய பழங்கள், மல்லிகை, ஜாதிமல்லி, செண்பகப் பூ, சாமந்திப் பூ, சம்பங்கி, அடுக்குமல்லி ஆகிய பூக்கள், அகத்திகீரை, அரைக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, சிறுகீரை, செங்கீரை, வெந்தயக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை உள்ளிட்ட பல தாவரங்களை இங்கு வளர்க்கிறார்கள். மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த பெண்கள் மூலமாக இது பராமரிக்கப்படுகிறது. மாடித் தோட்டத்தில் 7 ஆயிரத்து 200 சதுர அடியில் 720 கூடைகள் வைக்கப்பட்டு, ஒவ்வொரு கூடையிலும் ஒவ்வொரு விதமான செடிகள் வைக்கப்பட்டுள்ளன. சாணம், மண், தேங்காய்மஞ்சு (தேங்காய் நார்க்கழிவு) ஆகியவற்றைப் பயன்படுத்தி, தேவையான இயற்கை உரங்களைத் தயாரித்துக் கொள்கிறோம். எங்களுக்கும் இதுபோல் கூரைத் தோட்டம் அமைத்துக் கொடுங்கள்’ என பலரும் எங்களிடம் கேட்கிறார்கள். இதன் மூலம் எங்களுக்கு நல்லதொரு தொழில்வாய்ப்பும், வருமானத்திற்கான வழியும் கிடைத்துள்ளது என்கிறார்கள், மகளிர் சுய உதவிக்குழுப் பெண்கள். சூலூர் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பாலசுந்தரம், சில மாதங்களுக்கு முன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்க்குப் போயிருந்தபோது, கூரைத்தோட்டம் அமைப்பது பற்றி ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. எங்கள் அலுவலகம், தற்போதுதான் கட்டப்பட்டது என்பதால், அதிலேயே செயல்படுத்துமாறு கோரிக்கை வைத்தோம். அதனால்தான் எங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. விளைவிக்கப்படும் பொருட்களை, இப்பகுதியில் உள்ள 94 சத்துணவு மையங்களுக்கு விற்பனை செய்கிறோம். விரைவில் அலுவலக வளாகத்திலேயே கடை அமைத்து, பொதுமக்களுக்கும் விற்பனை செய்ய இருக்கிறோம். இதன் மூலம், ஒவ்வொரு வீட்டிலும் தோட்டம் அமைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் எங்கள் திட்டம் என்றார்.

**தொடர்புக்கு பால சுந்தரம், செல்போன் : 94433 50350**